# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2008 / 2009
## HELD IN AUGUST - 2009

## GGY 2.15 – INTRODUCTION TO CLIMATOLOGY

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக. உலகப் புறவுருவப்படம் வழங்கப்படும்.

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) வானிலை – காலநிலை ஆகியவற்றுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.

(ஆ) வெப்பநிலை – மழைவீழ்ச்சி ஏனைய காலநிலை மூலகங்களுக்கான அடிப்படைகளை உருவாக்குகின்றனவா? விளக்குக.

02. (அ) வளிமண்டல கட்டமைப்பின் எல்லைகளை வரையறை செய்க.

(ஆ) வெப்ப – வரவுசெலவு (Heat Budget) பற்றிக் கூறி, அதில் பெற்றவெயிலின் முக்கியத்துவம் பற்றி விமர்சிக்குக.

03. (அ) வளியின் ஈரப்பதன் என்பது யாது? அதன் வேறுபட்ட தன்மைகளை விளக்குக.

(ஆ) படிவுவீழ்ச்சி என்பதிலிருந்து யாது விளங்குகின்றீர்? நீரியல் வட்டத்தின் முக்கியத்துவத்தை விபரிக்குக.

04. (அ) கோட் காற்றுக்கள் என்றால் என்ன?

(ஆ) கோட் காற்றுத் தொகுதிகளை கோளப் படமொன்றில் குறித்துக் காட்டுக.

(இ) மேற்படி காற்றுக்களின் ஆரம்ப இடம், திசை, வேகம் மற்றும் சுழற்சி ஆகியன மாற்றம் பெறுவதற்கான காரணங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

05. (அ) சூறாவளிக் காற்றுக்கள் எவ்வாறு உருவாகின்றன?

(ஆ) சூறாவளிக் காற்றுக்களின் வகைகளையும் அதன் உறுப்புக்களையும் விபரிக்குக.

(இ) மிக அண்மையில் வீசிய சூறாவளிகளினால் ஏற்பட்ட உயிர் - பொருளாதார சேதங்களைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

06. (அ) இயற்கைக் காடுகளை வகைப்படுத்தி விளக்குக.

(ஆ) இயற்கைக் காடுகளுக்கும் காலநிலைக்கும் இடையிலான இடைத் தொடர்புகளை மிகத் தெளிவாக ஆராய்க.

07. (அ) பசுமை இல்ல விளைவு என்றால் என்ன?

(ஆ) வளிமண்டலத்தில் பச்சைவீட்டுவாயுக்கள் அதிகரிப்பதால் உருவாகும் விளைவுகளை விளக்குக.

(இ) இதனைத் தடுக்க கையாளப்படும் உபாய வழிமுறைகள் பற்றி விளக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** மாத்திரம் சிறுகுறிப்பெழுதுக.

(அ) வானிலை அவதானிப்புக் கருவிகள்

(ஆ) கெப்பனின் காலநிலை வகைப்பாடு

(இ) முகில்கள்

(ஈ) மனிதனால் காலநிலையில் ஏற்படுத்தப்படும் தாக்கம்

***